# Thoothukudi Firing: தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு..அதிகாரிகள் மீது கடுகடுத்த ஐகோர்ட் - நீதிபதிகள் கேட்ட நச் கேள்வி!

Jul 02, 2024 08:25 AM IST

Thoothukudi Firing Case, Madras high court: தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக கொலை வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



தூத்துக்குடியில் செயல்பட்டு வந்த ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரி கடந்த 2018-ல் நடந்த போராட்டத்தில் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூடு, தடியடி சம்பவங்களில் 15 பேர் உயிரிழந்தனர்.

**ஓய்வுபெற்ற நீதிபதி விசாரணை**

இது குறித்து விசாரணை நடத்த ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தின் விசாரணை அறிக்கை தமிழக சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதில், துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் ஈடுபட்ட 17 காவலர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்போதைய தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மற்றும் 3 வருவாய்த்துறை அலுவலர்கள் உள்ளிட்ட 21 பேர் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

**ஹென்றி திபேன் வழக்கு**

இந்த சம்பவம் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை, தேசிய மனித உரிமை ஆணையம் முடித்து வைத்ததை எதிர்த்து மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த போது, வழக்கில் எதிர் மனுதாரராக சேர்க்கப்பட்டிருந்த தூத்துக்குடி துணை காவல் கண்காணிப்பாளர் லிங்க திருமாறன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "மனித உரிமை ஆணைய சட்டத்தின் படி ஏற்கெனவே முடிக்கப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது. மாநில மனித உரிமை ஆணையமும், நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையமும் விசாரித்த வழக்கை மீண்டும் விசாரிக்க முடியாது" என வாதிட்டார்.

**மறு ஆய்வு செய்ய முடியும்**

இதை மறுத்த ஹென்றி திபென் தரப்பு, மனித உரிமை ஆணைய சட்டப்படி மனித உரிமை ஆணையங்கள் பிறப்பிக்கும் உத்தரவை மறு ஆய்வு செய்ய முடியும். அந்த வகையில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மீண்டும் விசாரிக்க எந்த தடையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. மேலும், சிபிஐ தரப்பிலோ, "துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் கூடுதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கை சிபிஐ சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கும். மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த அடிப்படை முகாந்திரமும் இல்லை." என ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து வாதங்களையும் கேட்டுக்கொண்ட நீதிபதிகள், "மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. நடந்த சம்பவம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்ட அதிகாரிகள் யாரும் இதுவரை வருந்தவில்லை. அவர்களுக்கு எதிராக கொலை வழக்கு தொடரப்பட வேண்டும் எனக் கூறிய நீதிபதிகள், துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டது யார்? இதற்கு யார் பொறுப்பு ஏற்பார்கள் என்றும் கேள்வி எழுப்பினர். தொடர்ந்து, எதிர் தரப்பினரின் ஆட்சேபங்களுக்கு பதிலளிக்க மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை வரும் ஜூலை 15ஆம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

முன்னதாக, 'தானாக முன் வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் முடித்து வைத்தது நியாமானதுதானா? என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியிருந்தது.

https://tamil.hindustantimes.com/tamilnadu/madras-high-court-adjourned-thoothukudi-firing-case-on-july-15-131719888289816.html#google_vignette